இணைந்த சேவைகள் சுற்றறிக்கை கடிதம் : 02/2017

எனது இலக்கம் : PA/CS/POLICY/ பிரமாணத் திருத்தம்,
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07
2017.05.05

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைக்கு உரித்தான கணனிப் பரீட்சை தொடர்பாக**

2004.01.01 ஆந் திகதி முதல் 2013.12.11 (சேவைப் பிரமாணம் வெளியிடப்பட்ட திகதி) ஆந் திகதி வரை அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட, இதுவரை அச் சேவையின் III ஆம் தரத்திற்கு உரிய வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்கு உரித்தான கணனிப் பரீட்சையில் சித்தியடையாத அல்லது அக் கணனிப் பரீட்சையில் விடுதலைப் பெறுவதற்கு முடியாமல் இருக்கின்ற அலுவலர்களுக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரின் இலக்கம் PSC/EST/5/2/25/I(II)/2012 மற்றும் 2017.04.05 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

- அவ் அலுவலர்கள், முன்னர் நிலவிய சேவைப் பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப அதாவது 2004.12.24 ஆந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 1372/23 இனைக் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை சேவைப் பிரமாணக் குறிப்பின் இலக்கம் 05 ஆம் பந்தியின் கீழ்க் காட்டப்பட்டுள்ள வினைத்திறன் காண் தடைப் பகுதியின் 5.1 மற்றும் 5.1.2 ஆம் பகுதிகளுக்கு ஏற்ப அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு உரித்தான கணனிப் பரீட்சையில் இருந்து விடுதலை செய்தல்.

ஒப்பம்/கே.வீ.பி.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.